தொகுப்பு இல. 20 இதழ். 2 ஐப்பசி 2024

கொழும்பு இறையியல் கல்லூரி

# INFORMATION





# கொழும்பு இறையியல் கல்லூரி ஏன் முக்கியமானது?

இது எமது 30 ஆவது ஆண்டு நிறைவு. இலங்கையிலுள்ள திருச்சபைகளின் தலைவர்களை இறையியல் ரீதியாக தயார்படுத்துவதற்காக கொழும்பு இறையியல் கல்லூரியானது தனது கதவுகளை திறந்த நாளாக 1994 வைகாசி 31-ம் அமைந்தது. பலருக்கு நான் கூறுகிற இவ்விடயமானது ஆர்வத்தை தூண்டலாம். 1994-ல் ஒரேயொரு கல்வி நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியானது தற்போது பத்தாக வளர்ச்சியடைந்துள்ளது. ஆரம்பத்தில் ஏறத்தாழ 40 மாணவர்களுடன் காணப்பட்ட வகுப்பறைகளில் தற்போது 800-ற்கும் மேற்பட்ட மாணவர்கள் காணப்படுகின்றனர், மேலும் 1997-ம் ஆண்டு 17 பட்டதாரிகளை ஏற்படுத்திய வகுப்பறை 2023-ம் ஆண்டு வரும்பொழுது 824 முன்னாள் மாணவர்களை கொண்டிருக்கிறது!

வைகாசி முதல் ஆடி வரை கொண்டாடப்பட்ட எமது நிறைவாண்டு விழா நிகழ்வுகளில் எமது இறையியல் கல்லூரியினுடைய வளர்ச்சியின் அற்புதமான மைல்கற்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடினோம். இருப்பினும், எனக்குள் 'ஆனால் எது?' கொழும்பு இறையியல் கல்லூரியை மிகவும் அவசியமானதாக்குகிறது?



அதிபரின் சிந்தனையிலிருந்து

**ஐவோ பூபாலன், PhD**
அதிபர்

அடுத்த 30 ஆண்டுகளுக்கு கொழும்பு இறையியல் கல்லூரி ஏன் அவசியம்? என்ற கேள்விகள் எழும்பியதை உணர்ந்தேன். கொழும்பு இறையியல் கல்லூரி ஏன் முக்கியமானதாக இருக்கிறது என்பதற்கு நாம் நம்புகிற சில காரணங்கள் இதோ:

**நற்செய்தி முக்கியம் என்பதால் கொழும்பு இறையியல் கல்லூரி முக்கியம்.**

கொழும்பு இறையியல் கல்லூரி என்பதுதான் அதன் முடிவல்ல. திருச்சபையானது இலங்கைக்கும் சகல தேசங்களுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பறைசாற்ற துணை நிற்பதற்காக இறையியல் கல்வியானது உயிர்ப்புடன் காணப்படுகிறது......

மேலும் வாசிப்பதற்கு

## அறிவித்தல்

# ஆலோசனைப்பணியில் உயர் சான்றிதழ் ஆலோசனைப்பணியில் பட்டச்சான்றிதழாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது

மொழி: ஆங்கிலம்



2025-ம் ஆண்டிலிருந்து கொழும்பு இறையியல் கல்லூரியானது, ஆலோசனைப்பணியில் உயர் சான்றிதழ் கற்கைநெறிக்கு பதிலாக ஆலோசனைப்பணியில் பட்டச்சான்றிதழ் கற்கைநெறியினை வழங்கும்!

அண்மையில் ஆசிய கிறிஸ்தவ கல்வி சங்கத்தின் (ATA) அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டதை தொடர்ந்து, கற்றல் தரநிலைக்குரிய தேவைகளை பூர்த்தி செய்த நிலையில், கொழும்பு இறையியல் கல்லூரியானது தற்போது வழங்கி வருகின்ற ஆற்றுப்பணியில் உயர் சான்றிதழ் தகமையை பட்டச்சான்றிதழாக தரமுயர்த்துவதற்கான ஒப்புதலை பெற்றுக்கொண்டது. இக்கல்வித்தகைமையை பெறுவதற்கு மொத்தமாக 72 திறமை அளவு / புள்ளிகள் அவசியமாகும்.

கிறிஸ்துவைப்போன்ற தலைவர்களை உருவாக்கலின் 30 வருட நிகழ்வினை கொழும்பு இறையியல் கல்லூரியானது கொண்டாடியது

# சமூக கொண்டாட்ட தினம்!







2024 ஆனி 7: இந்நாளில் மாணவர்கள், காரியாலய ஊழியர்கள் மற்றும் கல்விப்பீட உறுப்பினர்கள் ஒன்றிணைந்து விளையாட்டுக்கள், உணவு, ஐக்கியவேளை மற்றும் நட்புறவு போட்டிகள் உள்ளடங்கலான களியாட்ட நிகழ்விற்காக ஹென்றி பேதிரிஸ் மைதானத்தில் ஒன்று கூடினர். மும்மொழிகளை சார்ந்த நிகழ்நிலை மற்றும் பௌதீகநிலை கல்விகளை தொடரும் மாணவர்கள் ஒருவரையொருவர் சந்திப்பதற்கும், வெவ்வேறு திருச்சபை பிரிவுகளை சார்ந்தவர்களுடன் நட்புறவினை கட்டியெழுப்புவதற்கும் இந்நிகழ்வானது விசேட வாய்ப்பாக அமைந்தது. நிகழ்வில் உரையாற்றிய கல்லூரியின் அதிபர் ஐவோ பூபாலன் அவர்கள், கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்வியானது வெறுமனே இறையியல் அறிவினை மாத்திரமல்ல, குணவியல்பு உருவாக்கம் மற்றும் கொழும்பு இறையியல் கல்லூரியின் மதில்களுக்கு அப்பால் ஒருவரையொருவர் ஆதரிக்கும் சமூகத்தின் ஒரு அங்கமாக இருப்பதும் முக்கியம் என வலியுறுத்தினார்.










## "கடவுள் நம்மோடு இருக்கிறார்"

Click Here

வலையொளியில் பாடலை கேட்பதற்கு இங்கே அழுத்தவும்.

கொழும்பு இறையியல் கல்லூரி மாணவர்கள் மற்றும் கல்விப்பீட உறுப்பினர்கள் ஒன்றிணைந்து நடத்திய 2-ம் தவணை நிறைவு சிற்றாலய ஆராதனையின்போது மும்மொழியிலான ஓர் இசைத்தொகுப்பானது பகிரப்பட்டது. கடந்த 30 வருடங்களில் கொழும்பு இறையியல் கல்லூரி ஊழியத்திற்கு கடவுள் செய்த காரியங்களை நினைவுகூரும் விதமாக அமைக்கப்பட்ட இப்பாடலானது 46-ம் சங்கீதத்தினை அடிப்படையாக கொண்டிருந்தது.




### நன்றியுள்ள சேவையின் மைல்கற்களை அடையாளப்படுத்தல்

## மாகாண ரீதியாக கொழும்பு இறையியல் கல்லூரி

தலைநகரில் இறையியல் கல்லூரியானது வளர்ச்சியடைந்து வருகிற அதேவேளை, நாட்டின் பிற பிராந்தியங்களில் இருக்கிற தலைவர்களை தயார்செய்வதற்கான மாபெரும் தேவையையும் புறக்கணித்துவிட முடியாது. இதற்கமைவாக, மாறும் சூழ்நிலைக்கேற்ப மாறுத்தரம் அளிக்கும் தனது அர்ப்பணிப்பின்படி யுத்த சூழ்நிலையின் மத்தியில் வாழும் விசுவாசிகளை பலப்படுத்தி பாதுகாக்கும் நோக்கில் அங்குள்ள திருச்சபை தலைவர்களை ஆயத்தப்படுத்தும் பொருட்டு, கொழும்பு இறையியல் கல்லூரியானது தனது முதல் வலுவான அடியை 2001-ம் ஆண்டில் வட மாகாணத்தில் எடுத்து வைத்தது. 2005-ல் சுனாமியால் பேரழிவை சந்தித்த தென் மாகாணத்தில் தலைவர்களை ஆயத்தப்படுத்துவதற்கான அழைப்பிற்கான மாறுத்தரத்தினை கொழும்பு இறையியல் கல்லூரி அளித்தது.

இன்று 9 மாகாணங்களில் 6-ல் கொழும்பு இறையியல் கல்லூரியின் மாகாண கல்வி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. நிகழ்நிலை கல்வி முறை மூலமாக பிற மாகாணங்களை சார்ந்த மாணவர்களுக்கு பாடநெறிகள் வழங்கப்படுகின்றன. கொழும்பு இறையியல் கல்லூரி தனது இறையியல் கற்றலை 9 மாகாணங்களிலும் உள்ள விசுவாசிகளும் அணுகக்கூடிய வகையில் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

30 வருட பயணத்தின் மைல் கற்கள்



வட மாகாணம்



தென் மாகாணம்



கிழக்கு மாகாணம்

# கற்றல் சமூகத்தினை மேம்படுத்தல்

## கொழும்பு இறையியல் தலைமையகத்தின் வருகைதரு கல்விப்பீட உறுப்பினர்கள்

### 'விசுவாசம், சமூகம் மற்றும் சமூகநீதி'



கலாநிதி.ஸ்ரீபன் பெய்லி கற்பிக்கும் முதுகலைமாணி பாடநெறி

### 'புதிய ஏற்பாட்டு இறையியல்'



புதிய ஏற்பாட்டின் புகழ்பெற்ற பேராசிரியரான கலாநிதி. எக்கார்ட் ஸ்னாபல் கற்பிக்கும் முதுகலைமாணி பாடநெறி

### 'பஞ்சாகமம்'



கலாநிதி.ஜுலி வூட்ஸ் கற்பிக்கும் முதுகலைமாணி பாடநெறி

### 'சிறுவர் மற்றும் குடும்பங்களுக்கான மேய்ப்பத்துவ பராமரிப்பு'



போதகர், ஆலோசகர் மற்றும் பயிற்சியாளரான கலாநிதி. டேவிட் சி குட்வின் கற்பிக்கும் குறுங்கால பாடநெறி

## தீவிர மன அதிர்ச்சிக்குள்ளானவர்களுக்கான முதுகலைமாணி வகுப்பு மற்றும் விசேட கருத்தரங்கு

### 'தீவிர மன அதிர்சி மற்றும் இடர்பாடுகளுக்குள்ளானவர்களுக்கான ஆலோசனை'

பேராசிரியர், ஆலோசகர் மற்றும் எழுத்தாளருமான கலாநிதி. டாமி ஷெல்ட்ஸ் கற்பிக்கும் முதுகலைமாணி பாடநெறி



முதுகலைமாணி (ஆலோசனைப்பணி) மாணவர்களுடன் கலாநிதி. டாமி ஷெல்ட்ஸ், பாடத்திட்ட ஒருங்கிணைப்பாளர் திலினி ஆபிரகாம்

தீவிர மன அதிர்ச்சிக்குள்ளானவர்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய சிறந்த புரிதலை போதகர்கள் மற்றும் திருச்சபை தலைவர்களுக்கு கொடுப்பதற்கான விசேட கருத்தரங்கு நடைபெற்றது.



கருத்தரங்கில் பங்குபற்றியவர்கள் தீவிர மன அதிர்ச்சிக்குள்ளானவர்கள் தொடர்பாக வேதாகமத்திலுள்ள உதாரணங்களின் மூலமாக ஆய்வு செய்வு, பரிபூரணமான குணப்படுத்தலை ஊக்குவிப்பதற்கான அணுகுமுறைகளை குறித்து கலந்துரையாடியதுடன், தீவிர மன அதிர்ச்சிக்கு பின்பதான நிலையை மேம்படுத்தும் பயிற்சிகளையும் கற்றுக்கொண்டனர்.

## கிறிஸ்தவக்கல்வி சான்றிதழ் பாடநெறி: சிறுவர் ஊழிய பயிற்சிப்பட்டறை

சிறுவர் ஊழிய பாடத்திட்டத்தில் இணைந்துகொண்ட மூன்றாவது குழுவை சேர்ந்த 86 மாணவர்கள், கடந்த ஆவணி மாதத்தில் கொழும்பு இறையியல் கல்லூரியின் தலைமையகத்தில் இரு நாட்கள் தங்கியிருந்து பௌதீகநிலை பயிற்சிப்பட்டறைகளில் ஈடுபட்டதுடன், சக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடனான ஐக்கியவேளையிலும் ஈடுபட்டனர்.



பாடநெறியின் ஒழுங்கிணைப்பாளர் திருமதி.கிருஷ்ணி எதிரிசிங்க மற்றும் விரிவுரையாளர்களுடன் தமிழ், சிங்கள மொழி மூலமான பாடநெறி மாணவர்கள்

பயிற்சிப்பட்டறைகளானது கற்கை முறைகள், ஆவிக்குரிய ஒழுக்கங்கள், நேர முகாமைத்துவம் மற்றும் உக்கிராணத்துவம் போன்ற பிரிவுகளில் கவனத்தை செலுத்துவதாக அமைந்தன. நூலகத்தினை எவ்வாறு சிறந்த கற்றல் வளமாக பயன்படுத்துவது என்பது பற்றிய தெளிவான விளக்கத்தினையும் மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

அம்பாந்தோட்டை, நுவரெலியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, பதுளை, பண்டாரவளை மற்றும் அம்பிலிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மாணவர்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.


இந்த முழுமையான நிகழ்நிலை கற்கைநெறியானது, இந்த ஆண்களையும், பெண்களையும் அவரவர் சூழ்நிலைகளில் சிறுவர் மற்றும் குடும்பங்களுக்கு மிகவும் வினைத்திறனுடன் தமது ஊழியத்தினை செய்வதற்கு தயார்படுத்துகிறதாக காணப்படுகிறது.

## கேட் (GATE) வழங்கிய கல்விப்பீடத்தினருக்கான பயிற்சி

**இறையியல் கல்வியாளர்களுக்கான உலகளாவிய சங்கம் நடாத்தும் 4 ஆண்டு கால கல்விப்பீடத்தினருக்கான பயிற்சித்திட்டம்**

இறையியல் கல்வியாளர்களுக்கான உலகளாவிய சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பயிற்சியில் கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினர்கள் இலங்கையிலுள்ள ஏனைய நான்கு உள்நாட்டு இறையியல் கல்லூரிகள் மற்றும் வேதாகம கல்லூரிகளை சார்ந்த கல்விப்பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டதற்கூடாக பெரிதான ஆசீர்வாதத்தினை பெற்றுக்கொண்டனர். ஆசிய இறையியல் சங்கம் (ATA) வழங்கிய கல்விப்பீடத்தினருக்கான இப்பயிற்சியில் 61 இறையியல் கல்வியாளர்கள் கலந்துகொண்டனர். கலாநிதி. தெரேசா லுவா, கலாநிதி. கேரி கிரி.ஃபித் மற்றும் கலாநிதி. பெனட் லோரன்ஸ் ஆகியோர் வசதிதருனர்களாக சிறப்பித்திருந்தனர். 4 பகுதிகளை கொண்ட இப்பயிற்சி திட்டத்தில் முதலாவது பயிற்சியினை நடாத்துவதற்கான சிலாக்கியத்தினை கொழும்பு இறையியல் கல்லூரியானது பெற்றிருந்தது.





## கலாநிதி. டேல் ரால்ப் டேவிஸிடமிருந்து கொழும்பு இறையியல் கல்லூரி நூலகத்தில் சேர்க்கப்பட்ட புத்தக தொகுப்புகள்

கலாநிதி. டேவிஸின் 80-வது பிறந்தநாளை முன்னிட்டு கலாநிதி. டேல் ரால்ப் டேவிஸ் எழுதிய புத்தகங்களின் தொகுப்பினை பெறுவதற்கான விசேட சிலாக்கியமானது கொழும்பு இறையியல் கல்லூரிக்கு கிட்டியது. கலாநிதி. டேவிஸ் வேதாகமத்திற்கான வாசிக்கத்தக்க மற்றும் பொருத்தமான விளக்கவுரையாளர்களில் / வர்ணனையாளர்களில் ஒருவராக அறியப்படுவதோடு, பிரசங்கம் / வர்ணனைகளை விளக்குவதில் தேர்ச்சி பெற்றவராகவும் விபரிக்கப்படுகிறார். தற்போது அவர் ஓய்வு பெற்றிருப்பினும், பல விளக்கவுரைகள் தொடர்பாக பணியாற்றி வருகிறார்.

# செயற்பாட்டில் CTS






பேச்சாளர்: கலாநிதி. பிரபோ மிஹிந்துகுலசூரிய

**ஆய்வரங்கு**

## இலங்கையின் சுதந்திரத்திற்கு கிறிஸ்தவர்கள் எவ்வாறு பங்களித்தனர்.

வைகாசி மாதம் இடம்பெற்ற ஆய்வரங்கில் கலாநிதி. பிரபோ மிஹிந்துகுலசூரிய இலங்கையின் சுதந்திரத்திற்கு கிறிஸ்தவர்கள் எவ்வாறு பங்களித்தனர் என்பது தொடர்பிலான தனது ஆய்வினை முன்வைத்தார். 1915-ம் ஆண்டில் இடம்பெற்ற படுகொலைகளை தொடர்ந்து இலங்கை தேசியவாத 'நீதிக்கான பிரச்சாரத்திற்கு' பிரித்தானிய கிறிஸ்தவ மனிதநேய அமைப்புகளின் பங்களிப்பு குறித்த அவரது முனைவர் பட்டத்திற்கான ஆய்வறிக்கையை அடிப்படையாக கொண்டு இம்முன்னிலைப்படுத்தலும், கலந்துரையாடலும் இடம்பெற்றிருந்தன. கொழும்பு இறையியல் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும், முழுநேர கல்விப்பீட உறுப்பினருமான கலாநிதி. மிஹிந்துகுலசூரிய, தற்போது கனடா ரீஜன்ட் கல்லூரியில் கிறிஸ்தவ வரலாற்று உதவி பேராசிரியராக பணியாற்றுகிறார். அத்துடன் அவர், கொழும்பு இறையியல் கல்லூரியின் வருகைதரு விரிவுரையாளராகவும், வருடாந்த ஆய்விதழின் (JCTS) பதிப்பாசிரியராகவும் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.




## நான்காவது லொசான் மாநாட்டில் கொழும்பு இறையியல் கல்லூரியின் பிரதிநிதித்துவம்

புரட்டாசியில் சியோலில் நடைபெற்ற உலக சுவிசேஷமயமாக்கல் குறித்த நான்காவது லொசான் மாநாட்டில் இலங்கையின் தூதுக்குழுவில் ஒரு பகுதியினராக, கொழும்பு இறையியல் கல்லூரியிலிருந்து ஆலோசனை மன்ற உறுப்பினர்கள், கல்விப்பீட உறுப்பினர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இறையியல்சார் செயற்குழுவின் இணைத்தலைவராக சேவையாற்றுகிற கலாநிதி. ஐவோ பூபாலன், மாநாட்டில் வெளியிடப்பட்டிருந்த 'சியோல் அறிக்கையினை' உருவாக்குவதிலும் முக்கிய பங்கினை வகித்திருந்தார். இது சுவிசேஷ கிறிஸ்தவத்தில் ஒரு முக்கிய ஆவணமென்பதுடன், பிரதான நம்பிக்கைகளை வரைகோடிட்டு காண்பிப்பதோடு சமகால சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை குறித்தும் அறிவுறுத்துகிறது.

# கொழும்பு இறையியல் கல்லூரி சமூகம்

## மாணவர் கதைகள்

### ஓட்டமாவடி: ஒரு சொல்லப்படாத கதை

கொழும்பு இறையியல் கல்லூரியின் ஆலோசனைப்பணியின் உயர் சான்றிதழின் பழைய மாணவியும், தற்போதைய முதுகலைமாணி மாணவியுமான ரோஷனாரா டிமெல், 'ஓட்டமாவடி: சொல்லப்படாத கதை' என்ற பகுதியின் எழுத்தாசிரியர் ஆவார். இக்கதையானது கோவிட்-19 பெருந்தொற்றுக்காலகட்டத்தில் நோய்த்தொற்றினால் உயிரிழந்த தமது அன்புக்குரியவர்களை தகனம் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட இலங்கை இஸ்லாமிய சமூகத்தின் போராட்டங்களுக்கு அழைத்து செல்கிறது. எதிர்காலத்தில் இது போன்ற துயர சம்பவமானது மீண்டும் நிகழாது என்ற நம்பிக்கையில் உண்மையான கதையானது எழுத்திலும், புகைப்படம் மற்றும் திரைப்படம் மூலமாகவும் இங்கு பதிவு செய்யப்படுகிறது.






“ஆரம்பத்திலிருந்தே ஓட்டமாவடியானது ஒரு ஆழ்ந்த இறை நம்பிக்கையின் அடிப்படையிலான ஒன்றாக எழுத்து எனும் கொடையை பயன்படுத்தி குரலற்றவர்களின் குரலை உரக்கச்சொல்லும் ஒன்றாக பார்க்கப்படுகிறது. கோவிட்-19 பெருந்தொற்றின்போது பாரபட்சத்தினாலும் அரசு பின்பற்றிய நியாயமற்ற நடைமுறைகளினாலும் அதிர்ச்சியின் தாக்கத்திற்கு உள்ளான இஸ்லாமிய சமூகத்தின் மீது ஒளியை பிரகாசிக்கச்செய்யும் ஒன்றாகவும் இது அமைகிறது. CTS ஆனது எனது இதயத்திலும் சிந்தனையிலும் ஆழப்பதித்துள்ளபடி கடவுள் எமக்கு தந்திருக்கிற ஆசீர்வாதமான கொடைகளை நீதி, உண்மை மற்றும் கிருபையின் கருவிகளாக செயற்படும் உக்கிராணக்காரர்களாயிருக்க நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம். என்னை அழைத்தவரே இந்த திட்டத்திற்கும் அழைத்தவராயிருக்கிறார். மனக்கசப்பும் சோர்வும் என்னை இத்திட்டத்தை கைவிடும்படியாக சோதித்தபோதெல்லாம் அவரே என்னை தொடர்ந்து செல்லும்படியாக வழிநடத்தியிருக்கின்றார். அவருக்கே மகிமை உண்டாயிருக்கட்டும்.”

ரோஷி என அன்பாக அறியப்படும் இவர் 2019 முதல் 2024 ஆனி வரை கொழும்பு இறையியல் கல்லூரியின் மேம்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தலின் இணைப்பாளராக பணியாற்றியவராவார். விளம்பரப்படுத்தலின் மூலோபாயம், உள்ளடக்க உருவாக்கம் மற்றும் கல்லூரிசார் விளம்பர மேம்படுத்தலுக்கான பல்தரப்பட்ட தளங்களை விருத்தி செய்வதற்கு அவரது தலைமைத்துவத்தின் மூலமாக கொழும்பு இறையியல் கல்லூரி ஊழியத்திற்கு பெரும் பங்கினை வழங்கியுள்ளார்.

மிக முக்கியமாக, அவரது வழிகாட்டலின் கீழாக பாடநெறி வழிகாட்டி மற்றும் செய்திமடலினை மூன்று மொழிகளிலும் கொழும்பு இறையியல் கல்லூரியினால் வெளியிடுவதற்கு இயலுமாக இருந்தது. ரோஷி தனது கற்றலை நிறைவு செய்து, தனது வாழ்க்கைப்பாதையில் முன்னேறி செல்வதற்கு கடவுளின் ஆசீர்வாதங்கள் கிடைப்பதற்கு நாம் வாழ்த்துகிறோம்.

## பிரியாவிடை அளித்தல்

### ரொஜர் ஸ்லெமர்மேன்



ரொஜர் அல்லது 'ரொஜர் மாமா' என்று அன்புடன் அறியப்படுகிற ரொஜர் ஸ்லெமர்மேன் கொழும்பு இறையியல் கல்லூரியில் 20 வருடங்களுக்கும் மேலாக பணிபுரிந்தவராவார். அவரது உதவி செய்கிற நற்குணம் மற்றும் கொழும்பு இறையியல் கல்லூரி மீதான அவரது ஆழமான விசுவாசம் தனித்தன்மை வாய்ந்ததொன்றாகும். கொழும்பு இறையியல் கல்லூரியில் அவரது அர்ப்பணிப்பானது மிகவும் பாராட்டுக்குரியது என்பதுடன், அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் கடவுளின் பிரசன்னமும், ஆசீர்வாதங்களும் தொடர்ந்து கிடைப்பதற்கு நாம் ஜெபிக்கிறோம்.

## கொழும்பு இறையியல் கல்லூரியிற்கு நன்கொடை அளிப்பதற்கு:

**1 வங்கி பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டு பணபரிமாற்றம் (அமெரிக்க டொலர் மற்றும் கனேடிய டொலர்)**

மேலதிக தகவல்களுக்கு எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

**2 கடனட்டை மூலமாக**

**கொழும்பு இறையியல் கல்லூரியின் இணையத்தளத்தில் கட்டணம் செலுத்தும் வலைவாசல் மூலமாக பணத்தினை பரிமாற்றம் செய்யலாம்**

www.cts.lk என்ற எமது இணையத்தளத்திற்கு செல்லுங்கள்

முகப்பு பக்கத்தில் மேல் வலதுபுறத்தில் உள்ள கொழும்பு இறையியல் கல்லூரியிற்கு நன்கொடை அளிப்பதற்கு என்ற (Give to CTS) பொத்தானை அழுத்துங்கள்

உங்கள் நன்கொடையை செலுத்துங்கள்

**4 நேரடி பணக்கொடுப்பனவுகள்**

நேரடியாக கொஹுவலையிலுள்ள எமது கொழும்பு இறையியல் கல்லூரியின் தலைமை காரியாலயத்திற்கு வருகை தரவும்.

**3 காசோலைகள்**

கொழும்பு இறையியல் கல்லூரி என **பெயரிட்டு** (கணக்கிற்கு செலுத்தவும் என குறுக்கு கோடிட்டு), அதிபர், கொழும்பு இறையியல் கல்லூரி, 189, துட்டுகெமுனு வீதி, கொஹுவலை, இலங்கை என்ற முகவரிக்கு **அனுப்பி வைக்கவும்**.


**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: வள மேம்பாட்டு முகாமையாளர், ரொஷல் ஹேக்கல்-ரணசிங்க**
+94 77 350 2930 | rochelle@cts.lk